


# வெளியே வருதல்

பாலியல் மாற்றீடான பாலியல் அடையாளங்களையும் பாலியல் தீர்மானங்களையும் கொண்ட பிள்ளைகளின் பெற்றோருக்காக

வெளியேறல் - "மாற்றீடான பாலியல் அடையாளங்களையும் பாலியல் தீர்மானங்களையும் கொண்ட பிள்ளைகளின் பெற்றோருக்காக" என்பது ஈக்குவல் க்ரவுண்ட் (Equal Ground) என்னும் நிறுவனத்தின் வெளியீடாகும். இதைக் கல்வி நோக்கங்களுக்கு மட்டும் அனுமதியின்றி மீள் பிரசுரிக்கலாம். ஆனால் இதை விற்று இலாபமீட்ட முடியாது. இவ்வெளியீட்டிலிருந்து எடுக்கப்படும் விடயங்கள் அல்லது தொகுப்புக்களது மூலகாரணங்களின் ஆதாரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். மற்றும் வேறு தேவைகளுக்காக மீள் பிரசுரம் செய்வதற்கு ஈக்குவல் க்ரவுண்ட் நிறுவனத்தின் அனுமதியை எழுத்து மூலம் பெற வேண்டும்.
மூலப் பகுதி தொகுப்பாளர் : மைக்கல் மெண்டிஸ் மற்றும் றொசானா ப்ளேமர் கல்தேரா

செம்மைப்படுத்தல் : றொசானா ப்ளேமர் கல்தேரா
வரைபடம் : முன்னூற்றி அறுபத்தி ஐந்து
அச்சகம் : சமயவர்தன ப்ரின்டர்ஸ்
ஈக்குவல் க்ரவுண்ட் நன்றி தெரிவித்துக் கொள்வது :

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மனித உரிமை பிரசாரம் (HRC) மற்றும் பெண் இனச் சேர்க்கையாளர் ஆண் இனச் சேர்க்கையாளர்களின் பெற்றோரும் நண்பர்களும்(FLAG) அவர்களது வெளியீடுகளிலிருந்து பல விடயங்களை மீள் பிரசுரிப்பதற்கு அனுமதி வழங்கியமைக்காக.

சமாதானத்தை உறுதிப்படுத்தும் பெண்களின் இயக்கம் மற்றும் கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனமும் இவ்வெளியீட்டிற்கு உதவி செய்தமைக்காக.

**This publication is supported by Women Defining Peace (WDP)**

Women Defining Peace

WUSC EUMC COWATER INTERNATIONAL INC. MATCH INTERNATIONAL

**Women Defining Peace (WDP) is a project funded by the Canadian International Development Agency (CIDA) and implemented by a consortium of World University Service of Canada, Cowater International and Match International Centre.**

Canadian International Development Agency | Agence canadienne de développement International

## அறிமுகம்

ஒரு பிள்ளை அல்லது வாலிபர் தனது நண்பனிடம் தான் ஆணை விரும்பும் ஆண் அல்லது பெண்ணை விரும்பும் பெண் என்று கூறுவது ஓர் கஷ்டமான சவாலாகும். ஆகவே இவர்கள் தம்மைப் பற்றி பெற்றோருக்குத் தெரிவிப்பது ஓர் இக்கட்டான விடயம் என்பதை ஒருவர் புரிந்து கொள்ளல் வேண்டும்.

ஒரு பிள்ளை தனது பாலியலைப் பற்றி பெற்றோருக்கு அறிவிக்கத் தயங்குவதற்குப் பல காரணங்கள் உள்ளன. சாதாரணமாக பயம் ஏற்படும் காரணங்களாக பெற்றோரின் நம்பிக்கையை இழக்க நேரிடும் மற்றும் இத்தகைய பிள்ளைகளைப் பெற்றோர் பிரித்து வைத்து தண்டனைக்கு உள்ளாக்குவர் என்ற பயமும் உண்டு. பெண்ணை விரும்பும் பெண்கள், ஆணை விரும்பும் ஆண்கள், இருபாலாரையும் விரும்பும் ஆண் பெண் மற்றும் பால் மாற்றமடைந்தவர்களைச் சார்ந்த (டுபுடீவு) பிள்ளைகளுக்கு ஓர் திடமான நம்பிக்கை உண்டு. அதாவது துரதிஷ்டமாக அவர்களது பெற்றோருக்கு இப்பாலியல் தன்மையைப் பற்றிய அறிவு குறைவு என்பதாகும். இது பெரும்பாலும் தவறு எனக் கூறலாம்.

இலங்கை போன்ற நாட்டில் ஒரு பால் உறவு தப்பபிப்பிராயத்துடனும் தவறாகவும் நோக்கப்படுகின்றது. அதாவது தன்பால்ஈர்ப்பு இயற்கைக்கு மாறானது என்றும், விந்தையானதென்றும், சகிக்க முடியாத ஒன்று எனக் கருதப்படுகின்றது. பாரம்பரிய நம்பிக்கைகளும் கலாச்சாரப் பழக்கவழக்கங்களும் நிலவும் வேளை மக்கள் பாலியலைப் பற்றி அறிந்துள்ளனர். அதேபோன்று பெற்றோரும் சாதாரணப் பாலியல் என்ன என்பதையும் "முறை தவறியபூ பாலியலைப் பற்றியும் தெரிந்துள்ளனர். ஆகவே (டுபுடீவு)யைச் சார்ந்த பிள்ளைகள் ஒரு பாலுறவைத் தமது பெற்றோர் அனுமதிக்கமாட்டார்கள் என்று கருதி அவர்களது பாலியல் அடையாளங்களை மறைத்து வைக்கின்றனர்.

உலகளாவிய உண்மை என்னவென்றால் பிள்ளைகள் பெற்றோரை வேண்டி நிற்கின்றனர். இது (டுபுடீவு) பிள்ளைகளுக்கும் உரித்தாகும். ஆகவே தன்பால்ஈர்ப்பு சம்பந்தமான பிள்ளையின் தேவைக்கு அதன் பெற்றோரின் வழிகாட்டல் அத்தியாவசியமாகும். ஏனெனில் மாற்றுத் தன்மை அடங்கிய பாலியலைச் சார்ந்தவருக்கும் ஏற்படும் தீங்கிற்கு இறையாகாமல் தடுப்பதற்குப் பெற்றோரின் துணை உதவும்.

இவ்வேளை இச்சிறு கையேடு உங்கள் மகன் அல்லது மகள் தனது ஒரு பால் உணர்வைப் பற்றித் தெரிவிக்கும் வேளை அச்சந்தர்ப்பத்தைக் கையாளும் முறையை அறிவிக்கும். மேலும் உங்கள் பிள்ளையை வழி நடத்தும் முறையையும் அதற்கு உதவி புரிவதோடு உங்களுக்கும் உதவியாக இருக்கும்.

## நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதாவது:

பெண்ணை விரும்பும் பெண் (Lesbian) - இச் சொல் ஒருபால் உறவு கொள்ளும் பெண்ணைக் குறிக்கும். அதாவது பெண்கள் தங்கள் வர்க்கத்தினர் மீது பாலியல் மற்றும் ஆன்மீக ரீதியாக உணர்ச்சி வசப்பட்டவர்.

ஆணை விரும்பும் ஆண் (Gay) - இச் சொல் ஒருபால் உறவை விரும்பும் ஆணைக் குறிக்கும். அதாவது ஒரு ஆண் தனது வர்க்கத்தின் மீது பாலியல் மற்றும் ஆன்மீக ரீதியாக உணர்ச்சி வசப்பட்டவர். (புயல) எனும் சொல் பொதுவாக ஆண் பெண் பேதமின்றி ஒரு பாலுறவை நாடுபவர்களைக் குறிக்கும்.

இருபாலாரையும் விரும்புபவர் (Bisexual) - இச் சொல் ஆண், பெண் இருபால் உறவை விரும்புபவர்கள். இவர்கள் ஆண்கள் மீதும் பெண்கள் மீதும் பாலியல் மற்றும் ஆன்மீக ரீதியாகவும் உணர்ச்சி வசப்பட்டவர்கள்.

பால் மாற்றமடைந்தவர்கள் (Transgender) - பரந்த அர்த்தமுடைய சொல். ஒருவரது பால் அடையாளம் மற்றும் உணர்ச்சிகள் சம்பிரதாயப்படி மற்றவர்கள் எண்ணுவதைவிட வேறு விதமாக வெளியிடுபவர்கள். மேலும் இச் சொல் ஒரு குடை போன்று பால் மாற்றமடைந்தவர்கள் எதிர் பாலுக்குரிய ஆடை அணிபவர் மற்றும் சாதாரண எண்ணங்களுக்கு எதிரானவரை உள்ளடக்கும்.

எதிர்பாலுடன் பாலுணர்ச்சி கொள்ளுதல் - இச் சொற்கள் எதிர்பாலுடன் பாலியல் மற்றும் (Heterosexual / Straight) ஆன்மீகரீதியான உணர்ச்சியைக் கொண்டவர்களை குறிக்கின்றன.

இவ்வெளியீட்டில் சில சந்தர்ப்பங்களில் “Gay” (ஒரு பாலுணர்வு) எனும் சொல் பல பால் அடையாளங்களையும் தன்மைகளைச் சார்ந்தவர்களைக் குறிக்கும். இது எழுத்தாளரின் வசதிக்காகப் பாவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது வேறு பால் அடையாளங்களையோ தன்மைகளையோ மறைமுகமாகக் குறிப்பிடவில்லை. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவை பொதுவாக எல்லா மாற்றீடான பாலியல் அடையாளங்களையும் பாலியல் தீர்மானங்களையும் குறிக்கும்.

## உங்கள் பிள்ளையின் பாலியலைப் பற்றி அறியவேண்டியது

உங்கள் பிள்ளை பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவர்களைச் (டுபுடீவு) சார்ந்தவரா என அறிய இரு முறைகள் உள்ளன. சாதாரண மற்றும் இலேசான முறையாவது உங்கள் மகன் அல்லது மகள் அவர்களைப் பற்றி உங்களிடம் கூறுவது. இது பொதுவாக “வெளியே வருதல்பூ என்பதாகும். இரண்டாவதாக குறைந்த விருப்பத்தைத் தரும் முறை. அதாவது உங்கள் பிள்ளை அறியாமலே அதன் பாலியல் தன்மையைப் பற்றி பிறரிடம் கேட்டறிவது. இல்லாவிடின் பிள்ளையின் நாளேட்டில் குறிப்பிட்டுள்ள தகவலைக் கொண்டு அதன் பாலியல் தன்மையை அறியலாம். இதை “வெளியில் எடுத்தல்பூ என்று சொல்லலாம்.

### வெளியே வருதல்

உங்கள் மகன் அல்லது மகள் உங்களை அணுகினால் அல்லது இறுதியாக வந்தடைந்து தாங்கள் பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபால-ாரையும் விரும்புபவர் அல்லது பால் மாற்றமடைந்தவரைச் சார்ந்தவர் என்று அறிவித்தால், நீங்கள் ஒரு சில காரணங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

• ஒருவர் தம்மைப் பற்றி ஒரு நண்பரிடம் வெளியிடும் வேளை தம்மைப் பற்றி அவருக்கு எந்தவித அபிப்பிராயம் எழக்கூடும் என நினைத்தாலும் அதை மாற்றிச் சொல்லும் சக்தியிராது. வயது வந்தவர்கள் தங்கள் பெற்றோரிடம் தமது பாலியல் தன்மையை வெளியிட ஆயத்தமாயிருந்தால் அவர்கள் தங்கள் பால் அடையாளங்கள் நிரந்தரமானவை என எடுத்துக் கூறும் துணிச்சலுடையவராவர். ஒரு பிள்ளை நன்று யோசித்து முடிவெடுத்தால் அது சாத்தியமாகும்.

• தன்பால்ஈர்ப்பினைச்சார்ந்த பிள்ளைகள் தம் அடையாளங்களை வெள-ியிட இக்கட்டான நிலையில் இருப்பர். அதாவது தம்மைப் போன்ற சமவயது வந்த பிள்ளைகளுடன் தம்மை ஒப்பிட்டு நிரந்தரமாக தம்மைப் பற்றி கேள்வியெழுப்பி இந்த முடிவுக்கு வருவர். அவர்கள் தமது வேறுபட்ட பாலியலை தமது பெற்றோர் முன் ஏற்றுக்கொள்வது ஓர் வேதனைக்குரிய செயலாகும். மற்றும் அவர்கள் சீவிப்பது ஓர் பாரிய சோதனையாகும். இதனால் தாம் தனியாகவே இச்சவாலைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

• பெரும்பாலும் பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவரைச் சார்ந்த பிள்ளைகள் தமது வயதிற்குச் சமமானவர் மூலம் கிண்டல் அல்லது ஓரம் கட்டுதல் போன்ற இன்னல்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே இத்தகைய துன்பங்களுக்கு இரையான வயது வந்த பிள்ளைகள் பதிலளிக்க முடியாத நபர்களாக தத்தளிக்கின்றனர். இத்தகையோர் உங்களிடம் தமது பாலியல் அடையாளங்களை உறுதிப்படுத்த வருவது அவர்கள் தம் நிலையின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. இந்நம்பிக்கையை மேலும் உறுதி செய்வதற்கு உங்கள் பதில் உறுதுணையாயிருக்கும்.

ஒரு பிள்ளை தனது பாலியல் அடையாளத்தை அறிந்து அதை வெளியிட்டு ஓர் இணக்கத்திற்கு வருவது கடினமான விடயமாகும். பெரும்பாலும் இது நிச்சயமற்றது மற்றும் இதை அவர்களது பெற்றோர் மறுக்கமாட்டார்கள் என்றும் அவர்களை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் மாபெரும் நம்பிக்கையுள்ளது. ஆகவே, உங்கள் பிள்ளை தனது பால் அடையாளத்தைப் பற்றி அறிவிக்கும் வேளை, அப்பிள்ளையின் தைரியத்தையும், நேர்மையையும் வியந்து தமது வயதிற்கு அப்பாற்பட்ட ஒன்றை வெளியிட்டதற்காக அதன் மீது அளப்பரிய பெருமைப்பட வேண்டும்.

## வெளியே வரச் செய்தல்

பிள்ளைகளுக்கு அவர்களது செயல்பாடுகளை தானாகவே அறிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பது அத்தியாவசியமாகும். பிள்ளைகள் அவர்களைப் பற்றி பெற்றோருக்கு அல்லது நண்பர்களுக்கு அறிவிக்க முன் சில காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளின் அனுமதியின்றி அவர்களது பாலியலைப் பற்றி அறிந்து கொள்வது புதினமல்ல. இந்நேரங்களில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும்.

ஒரு பிள்ளையை ஒழிந்திருந்த இடத்திலிருந்து இழுத்தெடுப்பது ஆபத்தாகும். வாலிபப் பருவத்தில் பிள்ளைகளுக்கு அவர்களது பாலியலைப் பற்றி சில சந்தேகங்கள் ஏற்படலாம். அவர்கள் இன்னும் சிறகடித்துப் பறக்கப் பார்க்கின்றன. அதற்கான உரிய இடம் அவர்களுக்குத் தேவை. உங்கள் பிள்ளை தன்பால் ஈர்ப்பினை சார்ந்தவர் எனக் கண்டுபிடித்தால், அதனை எதிர்த்துத் திட்டாமல் அதனுடன் பேச்சை ஆரம்பிக்கவும். நீங்கள் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்பால் ஈர்ப்பினைப் பற்றி ஏற்கனவே தெரிந்து கொள்ள வேண்டும். மற்றும் பெற்றோராக இருந்து உரிய முயற்சிகளை எடுத்தல் வேண்டும்.

அவர்களுடன் உணர்ச்சி வசப்பட்டு எதிர்க்காமல் இருப்பது மிக முக்கியமாகும். ஏற்கனவே ஒரு பிள்ளை தனது பாலியலின் செயல் முறை மற்றும் அதன் பாலியல் அடையாளத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு காலம் தேவை என்று கூறப்படுகிறது.

பாலியல் தீர்மானங்களைப் பற்றி கேள்வி எழுப்பும் பிள்ளைகளுக்குத் கேள்வி, பதில், அவநம்பிக்கை மற்றும் பயமும் உண்டு. எனக்கு என்ன நடக்கின்றது? நான் ஏன் வேறுபட்டுள்ளேன்? நான் எப்போதாவது சாதாரண பிள்ளையாவேன்? நான் வாழ்நாள் ப'ராகவும் தனியாகவா சீவிக்கப் போகின்றேன். இதைத் தெரிந்து கொண்டால் மக்கள் என்னை வெறுப்பார்களா? எனது பெற்றோர் என்ன சொல்லப் போகின்றார்கள்? இது பாவமா? இது ஒரு வியாதியா? இதற்குப் பரிகாரம் உண்டா?

இந்நிலையற்ற வேளையில் ஊடுருவி பிள்ளையை எதிர்ப்பது பயங்கரமானது. ஏனென்றால் உங்கள் பிள்ளையைப் பயமுறுத்தி அதைப் பகுத்தறிவில்லாத நடத்தைக்கு உள்ளாக்கி விடுவீர்கள். இதைக் கண்டு அவர்கள் ஓடி ஒழிய அல்லது அறையை மூடி விட்டு தங்களுக்கே வினை தேடிக் கொள்ளக்கூடும். ஆகவே பாலியல் நிலையில் இருந்து வெளியேற முடியாத பிள்ளையுடன் மிகக் கவனமாக நடந்து கொள்ளல் வேண்டும்.

## உங்கள் பிள்ளையின் பாலியலுக்கான பிரதிபலிப்பு

ஒரு பிள்ளையின் மாற்றீடான பாலியல், பாலியல் தீர்மானம் அல்லது அடையாளம் வெளிவரும் வேளை பெற்றோருக்கு அது ஓர் கஷ்டமான அனுபவமாய் இருக்கலாம். இதைப் பற்றி பெற்றோர் மனதில் எழும் உணர்ச்சிகளையும் கேள்விகளையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

### கோபம்

இயற்கைக்கு மாறானது - முறை தவறிய - வெட்கக்கேடானது.
நான் அவனை நெறி தவறிய வாழ்க்கை முறையில் ஈடுபட விடமாட்டேன். மிருகங்கள் கூட இத்தகைய முறையில் ஈடுபடுவதில்லை.
ஒரு ஆண் இன்னொரு ஆணுடன் பாலியல் உறவு கொள்ள முடியாது. இது முறை தவறிய செயலாகும்.

### பாவம்

கடவுளும் இதைப் பொறுக்கமாட்டார்.
அவனை வளர்த்தது மதத்தை அலட்சியப்படுத்த அல்லயூ

கோபம் சிலவேளை பகுத்தறிவைத் தட்டிவிடும். பிள்ளையுடன் கோபப்படுவது அப்பிள்ளையைப் புரிந்து கொள்ளவோ அல்லது அந்தச் சந்தர்ப்பத்தைப் புரிந்து அணுகவோ இடமளிக்காது சிலவேளை நிதானமாக அமர்ந்து இதைப் பற்றி சிந்திப்பது நல்லது. இக் கையேட்டில் உள்ள சில பாகங்கள் ஒரு பாலுறவு மீது உங்களது கோபம் நியாயமற்றது ஏன் என்பதைக் காட்டுகின்றன.

## புனிதமானது

அறியாமை பற்றி உள்ள அச்சம்
அவன் ஆண் பிள்ளைகளை விரும்புகின்றான் என்பதன் அர்த்தம் என்ன?
அவளுக்கு என்றாவது எப்படி ஒரு பெண்களைத் திருமணம் செய்ய முடியும்?
எனது பிள்ளைக்கு என்ன நடந்துள்ளது?

## எதிர்காலம் சிதைந்து விடுமோ என்ற அச்சம்

அவன் எப்படி திருமணம் செய்து பிள்ளைகள் பெறாது அர்த்தமற்ற வாழ்க்கையை நடத்தலாம்?
எனது பிள்ளை வளர்த்து முதுமை அடைந்து தனியாகவே இறந்து விடுமா?

## சமுதாயத்தில் தள்ளி வைக்கப்படும் என்ற அச்சம்

அவளுடைய பின்னால் மக்கள் அவளைப் பற்றி நகைத்துக் கொண்டிருப்பார்களா?
எவராவது உண்மையை அறிந்தால் அவனைக் கணக்கில் எடுப்பார்களா?

## சட்ட விளைவுகள் ஏற்படும் எனும் அச்சம்

என் மகள் இதற்காக சிறையில் அடைக்கப்படுவாளா?
அவர்களின் சௌக்கியத்திற்கான அச்சம்
எனது மகனுக்கு ஒரு நாள் HIV அல்லது AIDS வரக்கூடுமா?
எனது பிள்ளை எல்லாவித பாலியல் நோய்களுக்கு இரையாகுமா?

உங்கள் மனசு என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் தத்தளிக்கும் வேளை பல கேள்விகள் மனதிற்கு எழக்கூடும். நீங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது ஒரு பாலுறவைப் பற்றி கற்றிருக்கமாட்டீர்கள். மற்றும் இதைப் பற்றி தொலைக்காட்சியிலும் அதிகம் பேசப்படமாட்டாது. நீங்கள் பெரும்பாலும் கேள்விப்பட்டது எதிர்மாறானதாகும். ஆகவே உங்கள் பிள்ளைக்குள் என்ன நடக்கின்றதோ என்ற அச்சம் இயற்கையானதாகும். ஆகவே இக் கையேடு உங்களுக்குத் தேவையான புரிந்துணர்வை ஏற்படுத்தி உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்.

## வேதனை

### ஏமாற்றம்

அவளைப் பற்றி எனக்கு எவ்வளவோ கனவுகள் இருந்தன!.
அவன் செய்த எல்லாவற்றிலும் வெற்றி பெற்றிருந்தான் இது அவனைப் பாழாக்கி விடும்!..
எனது பிள்ளையொன்று இப்படிச் செய்யும் என எதிர்பார்க்கவில்லை.

### அதிர்ச்சி

மக்கள் எனது குடும்பத்தைப் பார்த்து நகைப்பார்களா?
எமது அயலார் இதைப் பற்றி அறிந்தால் என்ன நடக்கும்?

### பொறுப்பு

அவளுடன் அதிக நேரத்தைக் கழித்திருக்கலாமே?
நாங்கள் ஏதோ தவறு செய்ததனாலா எமது மகன் இப்படி இருக்கின்றான்?
பெற்றோர் என்ற வகையில் நாம் தவறிவிட்டோமா?

பெரும்பாலும் பெற்றோர் தமது பிள்ளை பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவர்களைச் சார்ந்தவர் என அறிந்தவுடன் தவிர்க்க முடியா வண்ணம் மனம் நொந்து போவார்கள். சில நேரங்களில் இந்த வேதனை ஒருவரது பாலியல் தீர்மானம் மற்றும் பால் அடையாளத்தை தவறாகப் புரிந்து கொள்வது அல்லது தவறான கருத்தினால் ஏற்படுவதாகும். இக்கையேடு இத்தகைய அனுபவத்தைச் சமாளிக்க உரிய அறிவைத் தரும்.

உங்கள் பிள்ளையின் பாலியலைப் புரிந்து கொள்ளுதல்

மாற்றீடான பாலியலைப் பற்றிய கேள்விகள் சிக்கலானவை. இங்கு முக்கியமான சில கேள்விகளுக்கு சுருக்கமான விளக்கத்தைத் தருகின்றோம். ஒரு பாலுறவு, இரு பாலுறவு மற்றும் பால் மாற்றம் அடைந்தவர் என்பது என்ன? ஒருவரிடம் இது எப்படி உருவாகின்றது? இது சாதாரணமானதா? அல்லது ஒரு வியாதியா? இதற்குப் பரிகாரம் தேவையா? நாம் வேறு கேள்விகளையும் இந்தப் பாகத்தின் மூலம் பதிலளிக்க முயற்சி செய்கின்றோம்.

ஒரு பாலுறவு என்பது ஒருவர் ஒரே பால் மீது உணர்ச்சி வசப்படுவது. இருபால் உறவு என்பது ஒருவர் இரு பால்கள் (ஆண், பெண்கள்) மீது உணர்ச்சி வசப்படுவது. பால் மாற்றம் அடைந்தவர்கள் என்பது ஒருவரது பால் அடையாளம் இயற்கையாகவே தனது பாலுடன் தொடர்பற்றது எனும் உணர்ச்சி. சிலர் ஏன் (LGBT) மேற்கூறிய பால்களைச் சார்ந்தவர்கள் என்பதற்கு நிச்சயமற்றதாக இருந்தாலும் அனுபவரீதியாக அவற்றிற்கு உரியவர்கள் என்பதாகும்.

## எனது பிள்ளை ஏன் பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவர்களைச் சார்ந்தது?

பெரும்பாலும் (டுபுடீவு) பிள்ளைகளின் பெற்றோருக்கு முன் கூட்டியே எழும் கேள்வி என்னவென்றால் ஏன் எனது பிள்ளை தன் பால் ஈர்ப்புக்கு உள்ளானது? இது என்ன காரணத்தினால் நடந்தது? நாம் அவனை வளர்க்கும் போது ஏதாவது தவறு செய்து விட்டோமா? இது ஒரு வியாதியா? அவர்கள் இந்த முறையா தேர்ந்தெடுத்துள்ளார்கள். சிலர் ஏன் தன் பால் ஈர்ப்பாளராகினார்? எனும் வினா விஞ்ஞானிகளை இடைவிடாது அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இலட்சக்கணக்கானோர் இவ்வினாவிற்கு பதில் தேடி ஆராய்ச்சி நடத்தி வந்தாலும் ஓர் இறுதி உடன்பாடு எட்டவில்லை.

எனினும், ஒருவரது பாலியல் தீர்மானம் அல்லது அடையாளத்தை நிர்ணயிப்பது ஓர் உயிரியல் அம்சம் எனும் திடமான அபிப்பிராயம் நிலவுகின்றது. சில விஞ்ஞானிகளின் கூற்றாவது பாலியல் என்பது ஒரு மரபு. ஒருவரது சரீர குணாம்சங்கள் (முடியின் நிறம், உயரம், வலது அல்லது இடது கை வண்மை) போன்றவற்றை நிர்ணயிப்பது போல் மரபு வழியில் பாலியல் தீர்மானமும் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதாகும். இக்கருத்தை நிரூபிக்க முடியாவிட்டாலும் இது மெதுவாக நம்பிக்கை ஏற்படுத்த நெருங்குகின்றது. சில குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் (இரட்டையர்) சமமான பாலியல் தீர்மானங்களைக் கொண்டவர் என்பது இக்கூற்றிற்கு ஆதரவளிக்கின்றது.

எப்படியிருந்தாலும் விஞ்ஞானக் கூற்று பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவரின் பெற்றோருக்கு அற்பமானது.

பிள்ளைகள் வளரும் சுற்றாடல் அதற்கேற்றவாறு அவர்களின் பாலியல் அடையாளங்களை நிர்ணயிக்கின்றது என்பது ஓர் பொது நம்பிக்கையாகும். அதாவது பிள்ளைகள் வளரும் போது அதன் சுற்றாடலில் வதியும் மக்கள் சிறுபிராயத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள், அவர்களது மாதிரி பணி மற்றும் அனுபவங்கள் போன்றவற்றிற்கு ஏற்றபடி பாலியல் வளர்ச்சியடைகின்றது.

உலகில் விஷேடமாக (டுபுடீவு)யைத் தேர்ந்தெடுப்பதனால் பல இம்சைகளுக்கு உள்ளாவதனால் எவரும் அதைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள். சில பெற்றோர் தமது

குறைபாடுகளினால் தான் தமது பிள்ளைகள் (டுபுடீவு)யை நாடினார்கள் என நம்புகின்றனர். ஆனால் பெற்றோர் தமது பிள்ளைகளின் பாலியல் தீர்மானங்களுக்குக் காரணமானவர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். மாற்றீடான பாலியல் தீர்மானங்கள் மற்றும் பாலூட்டும் வர்க்கங்களைப் போல் மனிதரிடையே சர்வ சாதாரண-மானவை. அது வியாதி அல்ல. பிள்ளைக்கு ஒரு பாலுறவைப் பற்றி கற்பிப்பதனால் இந்நிலை ஏற்படுவதில்லை. பிள்ளைக்குப் போஷாக்கு குறைவான உணவு கொடுத்தது அல்லது பிழையான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதால் ஏற்படுவதில்லை. இது ஓர் பிள்ளை ஆணாக அல்லது பெண்ணாக பிறக்கும் போதே வளர்ச்சியடைந்ததொன்றாகும். அதேபோன்று ஒரு பிள்ளை தனது இடது கையால் எழுத அல்லது அழகாக ஒப்பமிட முடியுமாயிருக்கின்றது.

## எனது பிள்ளைக்கு மூளைக் கோளாறு உண்டா?

இலங்கையைப் பொறுத்தவரை பலர் ஒரு பாலுறவு ஓர் மூளைக் கோளாறு என்றும் அதை ஏற்றுக் கொள்வது தூய்மையற்ற மேற்கத்திய உலகைச் சேர்ந்தது என்று எண்ணுகின்றனர். எனினும்

- 1973ம் ஆண்டில் அமெரிக்க மனோ வைத்தியச் சங்கம் ஒரு பாலுறவை தமது மூளைக் கோளாறு பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது.

- 2001ம் ஆண்டில் சீன மனோ வைத்தியச் சங்கம் ஐந்து ஆண்டு ஆராய்ச்சியின் பின் தமது மூளைக் கோளாறு வகைப்படுத்தும் பட்டியலில் இருந்து ஒரு பாலுறவை நீக்கிவிட்டது.

உலகின் இரு எதிர்மாறான கோணங்களில் ஒரு பாலுறவு ஓர் மனோ வியாதி என்று எண்ணப்படுவதில்லை. ஆகவே ஒரு பாலுறவை ஏற்றுக் கொள்வது மேற்கத்திய உலகில் மட்டும் நடைபெறுகின்றது அல்ல என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையின் சுகாதார அமைச்சர் (முன்னாள் அமைச்சர் திரு. சிறிபால டி சில்வா அவர்கள்) தற்போதைய தலைமை வகிக்கும் உலகின் உடன்பாட்டு முத்திரையைப் பதிக்கும் உலக சுகாதாரச் சங்கம் ஒரு பாலுறவை ஐஊனு1 இன் 10வது மறுசீரமைப்பில் இருந்து நீக்கிவிட்டது.

மேற்கூறப்பட்ட நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் வைத்திய கட்டுரைகள், ஒருபால் உறவுகள், உணர்ச்சிகள், நடைமுறை யாவும் சாதாரணமானவையும், நிச்சயமானவையும் ஆனவை என்று கூறுகின்றன. மேலும் ஒரு பாலுறவைப் பற்றி நெடுநாளாக நிர்மாணிக்கப்பட்ட கூற்று பரீட்சைக்குட்படுத்தப்படாதது ஆகும். அது சமூகத் தரத்தைத் தழுவியதனால் விஞ்ஞானத்திற்கு ஏற்கக்கூடியதானதல்ல. உலக சுகாதாரச் சங்கத்தின் ஐஊனு - 10ற்கேற்ப ஒரு பாலுறவு என்பது உளவியல் நோய் அல்ல. ஆனால் பால் அடையாளத்தை மாற்றி ஒரு பாலுறவு இரு பாலுறவை நாடுவது உளவியல் நோய் என்பதாகும்2.

இறுதியாக ஒரு பாலுறவு அல்லது இருபால் உறவு ஒரு உளவியல் நோய் அல்ல என்றும் அக்கூற்றை உலக பிரசித்தி பெற்ற உளவியல் நோய் நிபுணர்கள் நிராகரிக்கின்றனர்.

1. வியாதிகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான உலக புள்ளிவிபர வகைப்படுத்தல்.-ICD
2. தற்பெருமை வாய்ந்த பாலியல் தீர்மானம்.

## மாற்றீடான பாலியல்கள்: முறை தவறியவையா?

சமூகத்தில் உள்ள பல பேர் மாற்றீடான பாலியல் அடையாளங்கள் மற்றும் பாலியல் தீர்மானங்கள் முறை தவறியவை எனக் கருதுகின்றர். இயற்கையாக இருபால் உறவு எனும் ஒரே பாலியல் தீர்மானம் இருக்க வேண்டும் என்ற பொது நம்பிக்கை நிலவு-வதனால் இக்கூற்று பிழையாகும்.

மனிதரற்ற மிருகங்களிடையே ஒரு பாலுறவு, இருபால் உறவு மற்றும் பால் மாற்றம் கண்டவை இருப்பதை எழுத்து மூலமுள்ள சாட்சிகள் நிரூபிக்கின்றன. இத்தகைய நடத்தை பால், அன்புடன் பழகுவது, நேசம், இருவர் ஒன்று சேர்வது மற்றும் பெற்றோராவது போன்றவையாகும். ப்ரூஸ் பெக்மில் என்னும் ஆராய்ச்சியாளரின் 1999ம் ஆண்டு பதிப்புரை ஒரு பாலுறவு 1500 வர்க்கங்களில் அதாவது தலைமைக் குருவிலிருந்து குடல் புழு வரை காணப்படுகின்றது எனவும் அவை சுமார் 500 வர்க்கங்களில் காணப்படுவதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிலர் மிருகங்களிடையே நிலவும் ஒரு பாலுறவை மனித ஒரு பாலுறவோடு ஒப்பிடுவது நியாயமற்றது எனக் கூறுகின்றனர். உதாரணமாக மிருகங்களிடையே நிலவும் ஒரு பாலுறவு அது ஓர் இயற்கையான சுபாவம் என நிரூபிக்கின்றது.

## எமது கலாச்சாரத்தில் ஒரு பாலுறவு

சிலர் ஒரு பாலுறவு எமது கலாச்சாரத்திற்கு உகந்ததல்ல என்றும், ஒரு பாலுறவை அனுமதித்தல் எமது சமுதாயத்தின் கண்ணியத்தைச் சீரழித்து விடும் எனச் சொல்கின்றனர்.

இதைத் தழுவி நாம் முதன் முதலாக மேற்கத்திய உலகின் செல்வாக்கு எமது பெறுமானங்கள் மீது செலுத்து முன் ஆசியக் கலாச்சாரங்கள் பாலியலின் பன்முகத்தன்மையையும் சுதந்திரத்தையும் வரவேற்றன. இந்தியாவில் இன்றும் ஹிஜ்ரா என்னும் பிரிவை (ஆண்மையை இழந்தவர், பெண் உடை அணியும் ஆண்கள்) புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஓர் சுப சகுனம் என்று கூறுகின்றனர். பொதுவாக இந்தியாவில் நடைபெறும் குத்தன் வேதர் எனும் விசேட திருவிழா விஷ்ணுவை ஆதரிக்கும் சமூகத்திற்கு வணக்கம் செலுத்துகின்றது. கஜ'ராவோ ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் தொடக்கம் புராண சரித்திர வேதங்கள் வரை ஆசிய விஞ்ஞானம் பல வித பாலியல் தீர்மானங்களை இயற்கையானவை என்றும், ஆண், பெண் உடலுறவு (இருபால் உறவு) மட்டும் தான் பாலியல் தீர்மானங்கள் என்று ஏற்றுக்கொள்வது மேற்கத்திய சித்தாந்தம் என்றும் கூறுகின்றது. மற்றும் ஒரு பாலுறவைத் தண்டிக்கும் சட்டமானது பிரித்தானியரால் ஒரு யுகத்திற்கு முன் இயற்றப்பட்டது. ஆனால் இன்று அவர்களே இச்சட்டம் பிழை என்று அச்சட்டத்தை அவர்களது நாட்டில் ரத்து செய்து விட்டனர். ஆகவே எப்பாரம்பரியத்தைக் காப்பதற்காக இலங்கை இன்னும் காலம் தவறிய பிறரால் அமுல்படுத்தப்பட்ட இச்சட்டத்தை நிலைநாட்டுகின்றது என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இரண்டாவதாக சமுதாயம் சரித்திரம் ப'ராகவும் "கலாச்சாரம்பூ எனும் பதாதைக்குப் பின் ஒழிந்திருந்து முரடான அநீதியை மனித வர்க்கத்துக்கு எதிராக நடத்தி வந்துள்ளது. பெண்களுக்கு கொடுமை இழைத்தல் மற்றும் "கீழ் சாதிபூ என்னும் பாரபட்சம் சிறுபான்மைக்குரிய சமூகங்கள் மற்றும் பிற சமயங்களைத் தழுவுபவருக்கும் "கலாச்சார சாட்டின்பூ பேரில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சரித்திரப் புகழ் பெற்ற புத்த பெருமானில் இருந்து மகாத்மா காந்தி வரை மக்களை இம்சிக்கும் மற்றும் அவர்களின் உரிமைகளை மீறும் கலாச்சார பழக்கவழக்கங்களை நிராகரித்தனர். ஒரு பாலுறவைச் சார்ந்தவரின் சமத்துவ உரிமைகளை "கலாச்சார பதாதையின்பூ பேரில் மறுப்பது ஓர் மூடி மறைக்கப்பட்ட மதவெறியாகும்.

## சமுதாயத்தில் ஒரு பாலுறவு

இலங்கையின் சமுதாயம் ஒருவர் சாதாரணமாக வளர்ந்து, கல்வி கற்று ஓர் வெற்றிகரமான தொழிலை ஆரம்பித்து திருமணம் செய்து பிள்ளைகள் பெற்று வாழ்க்கை நடத்த எதிர்பார்க்கின்றது. இதைத் தான் சமுதாயமும் பெற்றோரும் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்ப்பது. இவ்வேளையில் பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர் மற்றும் பால் மாற்றமடைந்தவருக்குரிய பிள்ளைகளின் பெற்றோர் கீழ் காணும் வினாக்களை எழுப்பலாம்.

எனது பிள்ளை என்றாவது திருமணம் செய்யாவிட்டால் என்ன நடக்கும்? அவர்களுக்கு எதிர்காலம் என்ன? நாம் மறைந்த பின் அவர்களுக்கு ஒரு துணையின்றி பிள்ளைகள் இன்றி, அவர்கள் முதிர்ச்சியடைந்த பின் யார் அவர்களை பராமரிப்பர்? மக்கள் எம்மைப் பற்றி என்ன சொல்வார்கள்? ஓர் வயது வந்த மகனாவது மகளாவது யார் திருமணம் செய்ய விரும்பமாட்டார்கள். சமுதாயம் “சாதாரணம்பூ அல்லது “ஏற்றுக்கொள்வதுபூ என்பது ஓர் குறுகிய மங்கலான கருத்தாகும். ஒரு வெற்றிகரமான வாழ்க்கை திருமணம் முடிப்பதல்ல. ஒவ்வொருவரும் தமது வெற்றிகரமாக நிறைவேறும் வாழ்வை பாலியல் தீர்மானங்களைக் கருதாமல் தேர்ந்தெடுக்க உரிமை கொண்டவராவர். பெற்றோர் இயற்கையாகவே சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து “சாதாரணமாகவும்பூ ஏற்றுக்கொள்ளக்கூடியவராகவும், மரியாதைக்குரியவராகவும் இருக்கவேண்டும் என்று நினைக்கும் வேளை குறைபாடுள்ளவராக இருக்க விருப்பப்பட மாட்டார்கள். ஆகவே தமது பிள்ளை ஒரு பாலுறவு, இருபால் உறவு அல்லது பால் மாற்றமடைந்தவரைச் சேர்ந்தது என்று தெரியவரும் போது அவர்களுக்கு பின்வரும் இரண்டு விடயங்களைத் தேர்ந்தெடுக்க நேரிடும்.

- ஒன்றில் தனது பிள்ளையை வற்புறுத்தி அதன் பாலியல் தீர்மானத்தை மறுத்து, திருமணம் செய்து இருபால் உறவை நாடி பிள்ளைகள் பெற்று சாதாரண வாழ்க்கையை நடத்தச் செய்வது,

- அல்லது எல்லோருக்கும் பிரச்சினைகள் உள்ளன என்று ஏற்றுக் கொண்டு உங்கள் பிள்ளையை ஆதரித்து நேர்மையான வாழ்க்கை நடத்த உதவி அதன் ஆண் இனச்சேர்க்கை சம்பந்தமாக சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது

முதலாம் தேர்ந்தெடுப்பு பயங்கரமானது. ஏனெனில் அது களங்கமில்லாத பலரின் வாழ்க்கையை துன்புறுத்தும் (கீழே பார்க்கவும்). இரண்டாம் தேர்ந்தெடுப்பு அவ்வளவு இலேசானதல்ல. மற்றும் அது வழக்கத்திற்குரியதல்ல. ஆனால் அது தைரியமாக எடுக்கும் தீர்மானம் ஒன்றாகும்.

## சீவியம் நடத்துவது: மறுக்கப்பட்ட வாழ்வின் அபாயம்யூ

பல பெற்றோர் தமது பிள்ளைகள் அவர்களது ஒரு பாலுறவைத் தள்ளிவிட்டு கல்வி கற்பதை முடித்து திருமணம் செய்து ஒரு சாதாரண வாழ்வை ஆரம்பிப்பார் என்று எதிர்பார்க்கின்றனர். ஏனென்றால் டுபுடீவுயைச் சார்ந்த ஒருவருக்கு அதையே மையப்படுத்தினால் திருமண வாழ்வை நாட முடியும். மேலும் ஒரு பாலுறுவு என்பது ஒருவரது பாலியல் தேவைகளை மட்டும் ப'ர்த்தி செய்யும் என்று நினைக்கின்றனர்.

எதுவும் உண்மைக்கு அப்பாற்பட்டதல்ல. ஒருவரது பாலியல் அவரைச் சார்ந்ததொரு அங்கமாகும். ஒருவரது பால் அடையாளம், தன் பால் ஈர்ப்பு, இருபாலாரையும் விரும்புதல் மற்றும் பால் மாற்றமடைந்தது அவர் எதை விரும்புகின்றார், பொழுதுபோக்கு, தம்மைத் தெளிவுபடுத்தும் விதம், உலகைப் பார்க்கும் விதம் எல்லாவற்றையும் பாதித்து விடும். அவர்கள் தன் பால் ஈர்ப்பு, இருபால் ஈர்ப்பு, அல்லது பால் மாற்றமடைவதில் இருந்து விடுபட அவர்களது இயற்கையான உணர்ச்சிகளையும், ஆசாபாசங்களையும் ஒடுக்கி விடவேண்டும். ஒரு அலுவலகத்தில் அல்லது இராப்போசன விருந்தின் போது நடைபெறும் பேச்சுக்கள் மிக கவனமாக நடத்தப்பட வேண்டும். அதாவது அவர்கள் வாழும் பொய்யான வாழ்வைப் பற்றி சந்தேகம் எழாமல் உறுதியுடன் பேச்சைத் தொடரவேண்டும். இத்தகைய வாழ்க்கை ஒருவருக்கு மிகக் கடினமாக இருக்கும்.

இருவர் மத்தியில் அன்பார்ந்த தொடர்பு ஏற்படும் வேளை இருவரும் அன்பு, கவனம், பாதுகாப்பு மற்றும் விருப்பம், நேர்மை போன்றவற்றை எதிர்பார்ப்பர். ஆனால், ஒரு பாலுறவைச் சார்ந்த ஆண் அல்லது பெண் அவர்களிடையே எதிர்பார்ப்பது ஆண் பெண் உறவின் எதிர்பார்ப்புகளுக்கு வேறுபட்டவை. ஆகவே ஒரு பாலுறவைச் சார்ந்த ஒருவரை பலவந்தமாக ஆண், பெண் உறவைச் சார்ந்தவரை திருமணம் செய்யச் சொன்னால் அவர்களிடையே நிலவும் தொடர்பு சமநிலையாகாது. இவ்விருவரும் உணர்ச்சிவசமாகவும், பாலியலிலும் நிறைவு காணமாட்டார்கள். இது நிச்சயமாக வேதனையைத் தரும். மேலும் அது சந்தோஷமில்லாத திருமண வாழ்வாகி விடும் மற்றும் அக்குடும்ப வாழ்க்கையில் பிறக்கும் குழந்தைகளும் துன்பத்திற்கு ஆளாவார்கள். மிக மோசமான காட்சி என்னவென்றால் குடும்ப வன்முறை, நம்பிக்கைத் துரோகம், மதுபானத்திற்கு அடிமையாதல் ஆகும். நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால், யாராவது தமது பால் அடையாளத்தை மறைத்து வேறொரு வாழ்க்கையை நாட விரும்புவது அவர்களுக்கு சமுதாயத்திலிருந்து ஏற்படும் அழுத்தம் காரணமாகவே. ஆனால் சமுதாயத்தில் நாம் நடைமுறைக்கு ஏற்றபடி போக வேண்டும் என்ற அழுத்தம் உண்டு. சமூக அழுத்தங்களுக்கு அடிபணியும் போது பலருக்கு வருத்தமாக இருக்கும். ஆகவே இச்சமுதாய அழுத்தங்களை மறுப்பது நல்லது. சாதாரண வாழ்வை நாடுவதை விட மாறுபட்ட வாழ்வை நடத்துவதே நல்லது. நேர்மையான பாலியல் வாழ்க்கையை நடத்துவது இலேசான காரியமல்ல. பயத்தோடு வாழ்வது பொய்யானது. ஆகவே நேர்மையுடன் வாழ்வது ஒருவரைப் புண்படுத்தாது.

## ஒரு பாலுறவின் சுகாதாரச் சீர்கேடுகள்

பலர் ஒரு பாலுறவு பாலியல் சம்பந்தமான நோய்கள் பாரிய விதத்தில் பரப்பும் அபாயத்தைக் கொண்டுள்ளது என நம்புகின்றனர். ஆனால் பாலியல் நோய்களானவை எல்லா வித பாலியல் தீர்மானங்களைச் சார்ந்த மக்களிடையேயும் பரப்பப்படுகின்றன. ஆகவே இந்நோய்கள் ஒரு பாலுறவைச் சார்ந்தவர்களை மட்டும் வேறு விதமாகப் பாதிக்காது. யுஐனுளு அதிகமாகக் காணப்படும் ஆபிரிக்காவில், பெரும்பான்மையாக யுஐனுளு தொற்றுநோய் ஆண், பெண் உறவு மூலம் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆகவே பெற்றோர் ஒரு பாலுறவைச் சார்ந்த பிள்ளையை இருபால் உறவைச் சார்ந்த பிள்ளையை பாலியல் வியாதிகளிலிருந்து காப்பதைப் போல் காப்பாற்ற வேண்டும். பெரும்பாலும் பெற்றோர் அவர்களது பிள்ளைகளுக்கு மணவாழ்க்கைக்குள் குடிப்பழக்கத்திலிருந்து விலகி நிற்பது, ஒரு தாரப் பழக்கம் மற்றும் பாலியலைப் பற்றிக் கற்றுக் கொடுப்பர். இப்போதனை ஒரு பாலுறவைச் சார்ந்த பிள்ளையொன்றிற்கு மாறுபடத் தேவையில்லை. வாலிபர்களைக் கண்காணித்து அவர்கள் தவறு செய்யாது பணிந்து நடப்பதை உறுதி செய்தல் வேண்டும். இது ஒரு பாலுறவைச் சார்ந்த வயது வந்த பிள்ளைகளுக்கு மட்டுமல்ல. இது எல்லாப் பால் அடையாளங்களுக்குரிய பிள்ளைகளைச் சாரும்.

ஒரு பிள்ளையின் பாலியல் நோய் வாய்ப்படுவதை அதன் பால் அடையாளம் நிர்ணயிக்காது. ஆனால் அதன் பெற்றோரின் திறமையால் பாலியல் தீர்மானங்களின் நோய்களை நிர்ணயிக்க முடியும்.

## உங்கள் பிள்ளைகளின் பாலியலை ஆதரித்தல்

இதுவரை இக்கையேடு மாற்றீடான பாலியலை விளங்கிக் கொள்ளத் தேவையான அறிவை புகட்டியுள்ளதோடு இலங்கையில் டுபுடீவுயாய் இருப்பதில் எழும் விளைவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. ஒரு பிள்ளை அவள் அல்லது அவன் பாலியல் தீர்மானத்தை சமுதாயம் எவ்வளவு புறக்கணித்தாலும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பிள்ளையை வற்புறுத்தி அல்லது தைரியப்படுத்தி நேராக வாழச் செய்வதனால் அதன் உண்மையான சந்தோஷத்தைப் பறித்துவிடும் என்றும் அதனால் அப்பிள்ளையுடன் உள்ள களங்கமற்ற மக்களையும் பாதிக்கும் எனக் கூறினோம்.

இது இலங்கையிலுள்ள தன் பால் ஈர்ப்பு, இருபால் ஈர்ப்பு, அல்லது பால் மாற்றத்தைச் சார்ந்தவர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை என்பதல்ல. உங்கள் பிள்ளை டுபுடீவு சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர் என்றால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். இப்பகுதி டுபுடீவு பிள்ளைகளின் பெற்றோரின் பணி அவர்களது பிள்ளைகளுக்கு உதவி செய்து அவர்களின் பிள்ளைப் பருவத்தையும் வயதுவந்த பருவத்தையும் கடக்க உதவுவதற்கு எவ்வளவு முக்கியமானது என்று ஆராயும்.

உலகெங்கும் பிள்ளைகள் தங்கள் பாலியலைப் பற்றி தத்தளிக்கும் வேளை எவ்வளவோ விபரீதங்கள் நடந்துள்ளன. இது அவர்களுக்கு ஓர் கஷ்டமான காலம். இக்காலத்தில் அவர்களுக்கு உரிய உதவியை உரிய நேரத்தில் வழங்கவேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து நேரிடும். ஆகவே பிள்ளைகளுக்கு உதவுவதும் புத்திமதி கூறுவதும் பெற்றோரின் பிரதான பணியாகும். தீர்மானமான பகுதிகள் பின்வருமாறு ஆராயப்படுகின்றன.

உங்கள் பிள்ளை தனது பாலியல் விஷயத்திற்காக சிலவேளை உங்களை அணுகியிருக்கலாம் அல்லது அணுகாதிருக்கலாம். அப்படி உங்களை நாடியிருந்தால் கீழ் தரப்பட்ட புத்திமதி அவற்றை நடைமுறைப்படுத்த இலேசாக இருக்கலாம். உங்களை அணுகாவிட்டால் நீங்கள் அவ்விடயத்தைக் கிரகிக்க முன் சிறிது காலம் பொறுத்திருக்கலாம். சாதாரண பேச்சுக்கள் ஆரம்பிக்க அவர்களுக்கு பயப்படத் தேவையில்லை என்ற எண்ணத்தைக் கொடுக்க பாலுறவை ஒதுக்கி வைப்பதைத் தவிர்க்கவும்.

அவர்கள் உங்களிடம் வந்தால் அல்லது வரவிரும்பினால் அல்லது அவர்கள் இன்னல் அனுபவிக்கின்றார்கள் எனத் தெரிந்தால் இப்புத்திமதியை அனுசரிக்கவும்.

## உங்கள் பிள்ளைகளைப் பொறுப்பேற்று திடமாக்கவும்

ஒரு பிள்ளைக்கு தன்பால் ஈர்ப்பு, இருபால் ஈர்ப்பு, அல்லது பால் மாற்றமடைந்தவராயிருப்பது மிகக் கஷ்டமான சோதனையாகும். அவர்களுக்கு நிறைய வினாக்கள் எழுவதோடு நிச்சயமற்ற நிலையும் உருவாகின்றது. எனக்கு என்ன நடக்கின்றது? மக்கள் என்ன சொல்வார்கள்? எனது நண்பர்கள் என்னை வெறுப்பார்களா? இது அவர்களுக்கு தெரியவந்தால் என்ன நடக்கும்? நான் என்றும் இப்படியே இருப்பேனா? அல்லது இது ஒரு தோற்றம் மட்டுமா? இப்படி அளவில்லாத வினாக்கள் எழக்கூடும்.

உங்கள் பிரதானதான பணி என்னவென்றால் நீங்கள் உங்கள் பிள்ளையுடன் இருப்பதையும், அவர்களது குழப்ப நிலையை உணர்வதையும், எப்பொழுதும் அதன் பின்னாலே இருப்பதை உணர்த்த வேண்டும். அப்போது அவர்களுக்கு நீங்கள் இருப்பது தைரியமளிக்கும். ஆகவே அவர்களைப் பொறுப்பேற்றுத் திடமாக்கவும்.

## அவர்களுக்குக் காலத்தையும் இடத்தையும் அளிக்கவும்

இளவயதிலே ஒருவருக்கு தன் பால் ஈர்ப்பு, இரு பால் ஈர்ப்பு, அல்லது பால் மாற்றமடைவதைப் பற்றி அவசர தீர்மானத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு அவர்களது நிலையைப் பற்றி விளங்கிக் கொள்ள அதிக நேரம் தேவையாக இருக்கும். பிள்ளைகளது பாலியல் தீர்மானத்தை இப்பொழுது அல்ல நேரம் கழித்து தேர்ந்தெடுத்தாலும் நீங்கள் அவர்களை அன்புடன் அனுசரித்து ஏற்றுக் கொள்வீர்கள் எனும் செய்தியை அனுப்பவும்.

பாலின்பஆர்வம் பற்றி பேசுவது பிள்ளைக்கு அதிர்ச்சியைத் தரும். ஆனால் உண்மையைச் சொன்னால் கட்டாயம் அவர்களுடன் பேசவேண்டும். பேசாமல் அமைதியாக உங்கள் பணிகளில் ஈடுபடுவது அவர்களை தள்ளிவிட்டு புறக்கணிப்பது போலாகிவிடும். நீங்கள் அவர்களுடன் பேச விருப்பமில்லாதது அவர்களைத் தள்ளி வைத்ததாக ஊர்ஜிதம் செய்யப்பட்டு அவர்களை வெட்கப்படச் செய்யும்.

## அவர்களுக்குரிய கௌரவத்தைக் கொடுக்க வேண்டும்

வாலிபப் பருவம் தனக்குச் சமமானவர்களால் அழுத்தங்களுக்கு உள்ளாகும் காலம். வூலிபர்கள் எப்பொழுதும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்களா அல்லது தள்ளி வைக்கப்படுவார்களா என்ற பயத்துடன் இருப்பர். தங்களது சக மாணவர் ஒரு பாலுறவிற்கு கருணை காட்ட மாட்டார்கள். பாடசாலை சுற்றாடலில் உடலுறுப்புக்கள் உணர்ச்சி வசப்படும் வேளை அவர்களது பாலியலைப் பற்றி நேர்மையாக யோசிப்பார்கள். டுபுடீவு உங்களது பிள்ளையை குறைவாக்கி, பலவீனமாக்கி தாழ்த்திவிடும். மெதுவாக வெட்கப்பட்டு அவர்களையே வெறுக்க நேரிடும்.

இதனால்தான் உங்கள் பிள்ளையைப் பற்றி பெருமைப்படுவது முக்கியம்.தன் பால் ஈர்ப்பானது அவ்வளவு இலேசானதல்ல என்றும் அவர்கள் அந்நிலையை ஏற்றுக் கொள்வதைப் பற்றி பெருமைபடுகிறீர்கள் என்று நீங்கள் உணர்த்த வேண்டும். உங்கள் பிள்ளையின் வெவ்வேறு சாதனைகளையும் சாமர்த்தியங்களையும் பற்றி ஞாபகப்படுத்தல் வேண்டும். தன் பால் ஈர்ப்பினால் இவை அகற்றப்படவில்லை எனக் கூறுங்கள். மற்றும் இந்நிலை உங்களுக்கு அல்லது பொதுவாகவோ அப்பிள்ளைக்கோ செல்லுபடியாகதொன்று என ஆகிவிடாது.

## அவர்களுக்கு மீளும் தன்மை அளிக்கவேண்டும்

எமது சமுதாயத்தில் டுபுடீவு மக்கள் தூஷிக்கப்படும் விஷ சூழலில் உங்கள் பிள்ளை ஏளனம், கிண்டல், பாகுபாடு போன்றவற்றிற்கு உள்ளாகித் தவிக்கும். இலங்கையில் தீவிரமாக உள்ள ஒரு பாலுறவைப் பற்றிய நியாயமற்ற பயத்தினால் அவர்கள் அநீதிக்குள்ளாவார்கள்.

பெற்றோர் என்ற வகையில் உங்கள் பிள்ளைக்கு இந்நிலையிலிருந்து மீளும் தன்மையைக் கற்பிக்க வேண்டும். சமுதாயத்திலே எல்லா வித இன்னல்களுக்கு இரையாகிய மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களைப் பற்றி பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். இத்தகைய துன்பங்கள் முன் நாம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். இல்லாவிட்டால் வெறிச் செயலுக்கும் வெறுப்பிற்கும் அடி பணிய நேரிடும். ஆகவே உங்கள் பிள்ளையை ஏற்றுக் கொண்டு குடும்பம் நண்பர் எனும் இணைப்பை ஏற்படுத்தி அவர்களை சமுதாயம் மிதிக்க முற்படும் போது நீங்கள் துணையாத இருந்து அவர்களை உயர்த்த வேண்டும்.

இவ்வேளையில் சமுதாயத்திற்கு, தன் பால் ஈர்ப்பு, இருபால் ஈர்ப்பு , அல்லது பால் மாற்றமடைந்தவர் மீது உள்ள எதிர்மறை மனப்பான்மையை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்கள் முன்னிலையில் அவர்களைக் கிண்டல் செய்வதைத் தவிர்க்கவும். உங்கள் முன்னே ஒரு பாலுறவைப் பற்றிக் கூறும் ஏற்க முடியாத விமர்சனத்தை முறியடிக்காது இருக்க வேண்டாம். எல்லா பாலியல் தீர்மானங்களைச் சார்ந்தவரின் பொது மனிதத் தன்மை மற்றும் சமநிலை, கௌரவம் ஆகியவற்றிற்காக நிமிர்ந்து நிற்க வேண்டும். அப்படிச் செய்வதனால் ஒரு நல்ல உலகை உங்கள் பிள்ளைக்காக நிர்மாணிக்கலாம்.

## அவர்களுக்கு சமத்துவத்தைக் கொடுக்க வேண்டும்

ஒரு பாலுறவுக்கு எதிராக வாதாடுகையில் பல பேர் ஒரு பாலுறவு சட்டத்திற்கு மாறானது என்று கூறுகின்றனர்.

இலங்கை தண்டனை சட்ட நியதியின் 365-யு ஷரத்தின் கீழ் ஒரே பாலுக்குரிய இருவர் உடலுறவு கொள்வது சட்டத்தினால் தண்டனைக்குரியது என்பதாகும். இச்சட்டம் 1885ம் ஆண்டு பிரித்தானியரால் இலங்கையின் சட்ட ஒழுங்கிற்குள் புகுத்தப்பட்டது. இன்று பிரித்தானியா அந்நாட்டில் சட்டப்படி ஒரு பாலுறவை அனுமதித்துள்ளது. மற்றும் ஐக்கிய நாட்டுச் சபை உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் எங்கள் சட்டம் இலங்கையில் உள்ள டுபுடீவு சமுதாயத்தின் மனித உரிமைகளை மீறுகின்றது என்று கூறுகின்றன. உண்மையாகவே இச்சட்டம் இலங்கை கைச்சாத்திட்டுள்ள சமுதாய மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்திற்கு எதிரானது. இச்சட்டத்தை உடைத்துக் கவிழ்த்துவிட பங்களிப்பு செய்தால் உங்கள் பிள்ளைக்கு இலங்கையில் பாதுகாப்புடன் வாழ முடியும்.

## தொடர்ந்து அவர்களுக்கு பெற்றோராக இருங்கள்

வாலிபர் எந்த பாலியல் தீர்மானத்தைச் சேர்ந்தாலும் வாலிபரே தான். அந்த காரணத்தால் தான் அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்பதற்கு நீங்கள் கண்ணும் கருத்துமாக இருப்பது உங்கள் கடமையாகும். அளவுக்கு மேல் பிள்ளைகள் தன் பால் ஈர்ப்பாளரா என்று அறியும் ஆவலைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் பெற்றோர் அவர்களது நிலையினால் அவர்களை நம்புவதில்லை எனும் அபிப்பிராயம் எழக் கூடும். இருந்தபோதிலும், உங்கள் பிள்ளையை இலேசாக கணக்கெடுக்க வேண்டாம். எப்பொழுதும் புதிய நண்பர்களைப் பற்றி கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் எப்படி அவர்களது பொழுது போக்கை எங்கே கழிக்கின்றனர் என்பதிலும், மற்றும் அவர்கள் தொலைபேசியில், இணையத்தளத்தில் என்ன செய்கின்றார்கள் எனக் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். எல்லா பிள்ளைகளும் பிழைகள் செய்யும் சுபாவமுள்ளவர். மேலும் தவறான தீர்மானங்களையும் எடுக்கக்கூடும். டுபுடீவுயைச் சேர்ந்த பிள்ளைகளும் அதற்கு விதிவிலக்கல்ல.

# நன்றி

பாலியல் தீர்மானம் அல்லது பால் அடையாளத்தினால் குழப்பமடைந்த பிள்ளை அதிக பலவீனமான நிலையில் உள்ளது. இத்தகைய ஆபத்தான நிலையில் அவர்களுக்குப் பெற்றோரின் அன்பு, ஆதரவு மற்றும் வழிகாட்டல் தேவை. உலகெங்கிலும் உள்ள பிள்ளைகள் சரியான நேரத்தில் உரிய வழிநடத்தல் கிடைக்காதப்படியால் மிருகத்தன்மைக்கு இரையாகின்றனர். மேலும் அவர்கள் தமது வீடுகளிலிருந்து தம் பெற்றோரால் வெளியே தள்ளப்பட்டு கைவிடப்பட்டுள்ளனர். நீங்கள் இக்கையேட்டை வாசித்து அறிவைப் பெற்றதனால் உங்கள் பிள்ளைக்கு இந்த ஆபத்தான நிலையைத் தனியே கழிக்காமல் இருக்க முடிந்தது. இதை வாசிப்பதனால் உங்கள் பிள்ளையின் உயிரைக் காப்பாற்றியுள்ளது மற்றும் அது உங்களை ஒரு அக்கறையில்லா பெற்றோரை விடுத்து அன்புள்ளவராக இருக்க மாற்றத்தைத் தந்துள்ளது. நல் வாழ்த்துக்கள்யூ

# மேலதிக வளங்கல் மற்றும் பல தகவல்கள்

EQUAL GROUND, **Sri Lanka**

ஈகுவல் க்ரவுண்ட் இலங்கையில் உள்ள பெண்ணை விரும்பும் பெண், ஆணை விரும்பும் ஆண், இருபாலாரையும் விரும்புபவர், பால் மாற்றமடைந்தவர்கள் மற்றும் இருபால் உறுப்புக்களைக் கொண்டவர் வினா எழுப்பும் டுபுடீவுஜஞ சமுதாயத்தவரின் மனித உரிமை, அரசியல் உரிமைகளையும் மற்றும் பாலியல் தீர்மானம் பாலியல் அடையாளத்தைச் சார்ந்த பாகுபாடுகளையும் அகற்ற ஒற்றுமை மூலம் உரிமை கோருகின்றது. இதற்காக ஈகுவல் க்ரவுண்ட் டுபுடீவுஜஞ சமுதாயத்தவருக்கு பத்திரமான இருப்பிடத்தை கொழும்பில் நடத்தி வருகின்றது. மேலும் அவர்களுக்குத் தேவையான மன ஆற்றுப்படுத்தல் சேவையினை திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 5.00 மணியிலிருந்து மாலை 9.00 மணி வரை தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம் திறந்திருக்கும்.

தொலைபேசி: +94-11-5679766 / +94-11-2512977.

தொலைநகல்: +94 – 11-2512296

සටහන්:



EQUAL GROUND


“எல்லா பாலியல் தீர்மானங்களுக்கும் பால் அடையாளங்களுக்கும்
சமத்துவம்: எல்லோருக்கும் மனித உரிமை.
தொலைபேசி : +94-11-5679766 / +94-11-2512977.
தொலைநகல் : +94 – 11-2512296
Web: http:/www.Equalground.org
Web:டிடழப : http:/ equalground.wordexpress.com